
15-02-2018



# மின் இதழ்

*பதிப்பு 19*

# பயணம் செய்யும் நூறு ரூபாய் நோட்டு

மயக்கம் மூண்ட சாயுங்கால ஒளியில்
விரைவு ரெயில்
பிரிவின் ஓலம் நிறைந்த ஊழையுடன்
நிலையத்திலிருந்து தயாராகிறது
கசந்த ஊரிலிருந்து சங்கரவடிவு
நினைவுகள் அடைக்கப்பட்ட
பயணப்பெட்டிகளோடு
ரெயிலேறுகிறான்

கழிப்பறையற்ற தனது நகரம் நோக்கி
பலர் தங்கும் அறையை
மனம் சுமந்து
சங்கரவடிவின் பயணம்
ரெயில் பயண ஓலத்தின் கூர் கிழிக்க
துவங்குகிறது

நகரத் தொடங்கிய
ரெயிலுக்கு வெளியே
வெறுமை ததும்பும் வழியனுப்புதலோடு
தர விருப்பமற்ற நூறு ரூபாய் நோட்டைப்
பெற்றுக் கொள்ளச் சொல்லி
வற்புறுத்தும் வழியனுப்புபவரின் கரம்
நீள மறுக்கிறது

"வேண்டாம் வேண்டாம்" என
முனகிய சங்கரவடிவின்
மன இடைவெளிகளில்
தர விருப்பமற்று நீட்டிய கரம்
பின்னகர்கிறது

கடைசி ரெயில் பெட்டியின்
தொலைவு கண்டு
பெருமூச்சு விட்டபின்
கொடுக்கப்படாத நூறு ரூபாய் நோட்டு
ரெயில் பெட்டிக்குள் சிக்குண்டு பறக்கும்
பட்டாம்பூச்சியென
சங்கரவடிவின் பயணம் முழுவதும்
அலைகிறது
கழிப்பறையற்றுக் கசக்கும்
வெளிறிய தன் அறை கனவுகளோடு

**லக்ஷ்மி மணிவண்ணன்**



# சாம்பல் பூத்த தெரு

ஊமையொருவன் கூவிக்கூவி
வார்த்தை விற்றுக்கொண்டிருந்த தெருவில்
நானென் விலாசத்தைத் தேடியலைகிறேன்!

சாமிகள் முட்டிய சண்டையில்
தீயில் குளித்து தற்கொலை செய்துகொண்ட
மசூதிக்கும் கோயிலுக்கும்
இடையில்தான் வசித்ததாய் நினைவு!

நடக்க நீண்ட வீதியில்
நட்சத்திரம் சேகரிக்கும் சிறுமி
சூரியனை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்!

வயோதிக உழவனொருவன்
மேற்கு முனையில்
எஞ்சியிருந்த ஒருபிடி மேகத்தை
ஏக்கத்துடன் பார்க்கிறான்.

அய்யனார் குதிரையின் காலில்
தன் காதலியின் பெயரை
பச்சைக்குத்திக் கொண்டிருந்தானொருவன்.

பொக்கைவாய் கிழவியொருத்தி
வெற்றிலையுரலில்
தன் பழைய நினைவொன்றை
இடித்துக்கொண்டிருந்தாள்!

ஓடையொன்றைக் குடத்திலடைத்து
இடுப்பிலேற்றும் யுவதியின் விழிகள்
திசைக்கொன்றாய் நீந்தத் தாவின!

எல்லைப் பிரச்சனைக்குக் காரணம்
எல்லைதான் என்று நாட்டாண்மை
தீர்ப்பு சொல்லி முடித்தான்!

சுட்ட பனம்பழமொன்று
நான்கு சிறுவர்களை மேய்ந்துகொண்டிருந்தது.

வேறொருவனுக்கு இதயத்தைப் பகிர்வது
தனது உரிமையென்று கணவனிடம்
வழக்காடினாள் ஒருத்தி!

கீழத்தெருபக்கம் போவியாவென
தன் செல்லமகனை விளாசிக்கொண்டிருந்தான்
மீசைக்காரன்!

ஆடுகள்
அடைபட பட்டிதேடி பயணிக்கும் அந்தியானது
தெருவை ஒரு மூலையிலிருந்து
கவ்வத்தொடங்கியது!

தேனீரகத்தில்
மூன்றுமணிநேரம்
செய்தி வாசித்தவன்
சொன்னான்
"இங்கே எவனும் சரியில்லை!"

இந்த ஒரேயொரு தகவலைக்கொண்டு
இந்த சாம்பல்பூத்த தெருவில்
நானெப்படி கண்டுபிடிப்பது
என்னை!?

குறிஞ்சி நாடன்

# மனதின் வளையம்

விழியற்ற ஒருத்தியின் உதடுகளால் ஆன
மாய உடலாகவே அலைகிறது
பனிக்காலை

தண்டுவட நீர்மம் மூளையினுள்ளே துடிப்பது
உயிர்ப்பின் ஊற்று

பூமியை ஏகமாய் சுழலவிடுவது எதுவோ
அதுவே
மனதின் வளையமாகிறது

தெளிவு என்ற சொல்லின்
ஆகப்பெரும் பரிசுத்த சொட்டுகள்
நமக்குள்ளே தான் ஊற்றெடுக்கின்றன

மறைவிலா வெளியில் இரகசியங்கள்
மறைந்திருக்கும் நுண்மை
வெள்ளிப்பூவாய் வந்தமர்கிறது

சுழல் மொழியில் மேலும் அது பேசுகிறது
மூளை வாழும் நிலப்பரப்பை விட
அதிக ஆச்சர்யங்களின் ஆழங்கள் கொண்டதை

வெற்றுப்பாதங்கள் உதடுகளை விட மேலானவை
கிளைவிளக்காக மண்ணில் சுடரும் அவை
புல் உரசும் இசைமணியில் மிதப்பவை

தட்டாம்பூச்சிக்கு இது பேரொலியாக இருக்கலாம்
மனதின் வளையத்தை இப்படித்தான்
சுழலப் பழக்கி இருக்கலாம்

**தேன்மொழி தாஸ்**



.

# என் மீச்சிறு பேராசையது

என்னைப்போலவே உனக்கும்
என்னை ஒருமுறையாவது பார்த்துவிடவேண்டுமென்ற
குறுகுறுப்பு நச்சரித்திருக்கிறதா?

உன் பெயர் உன் சாயல்
கொண்ட எவனோ ஒருவனை
தயக்கமின்றி திரும்பித்திரும்பி
நான் பார்த்ததுபோல்
உனக்கு நேர்ந்திருக்கிறதா?

என் கரம் பற்றித்திரிந்த
அந்த உள்ளங்கையையும்
புறங்கையையும் மீண்டும்
ஒருமுறையேனும் கோர்த்துப்பார்த்துக்கொள்ள
ஏதேனும் வாய்ப்பிருக்கிறதா?

பாவங்களை சுமப்பதாய்
சிலுவை சுமக்கும் கர்த்தர்போல்
நானும் வலி கனக்கும்
வேறொருவனின் பெருங்காதலை
சுமந்து கொண்டிருப்பவள்தான்

நினையும் நேரமும் திருடும்
கள்ளர் கூட்டமுமுண்டு
கணவன் குழந்தையெனும்
பெயரில்

இருப்பினும்
மிட்டாய்த்தாள்கள்
பீராய்ந்து பரிசளித்து;
மரவட்டை குச்சியிலெடுத்து
எறிந்து மிரளச்செய்து;
கடலைக்காதணி
அணிவித்து மகிழச்செய்து;
எல்லா நாடகங்களிலும்
நான் ராணியாகவும்
நீ சோனிப்புலவனாகவும் நடித்த;
ஒரு நெருக்கமான
வெள்ளந்திச்சிரிப்போடும்
எனக்கான ப்ரத்யேக நேசத்தோடும்
என் மனதின் இடுக்கில்
மயிலிறகாய் நீவிக்கொண்டிருக்கும்;
இன்னும்
பத்து வயது சிறுவனாகவே
என் நினைவில் தங்கிவிட்ட
உன் மனதிலும்
அதே போன்றதொரு
குட்டிச்சிறுமியாக
நான் இருக்கிறேனா?


***காயத்ரி***

இறந்த நதியில் மீனின்
எச்சங்கள் கவிழ்ந்த நதியை
மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது
புதைந்த மீனின் நிழலை
தூண்டிலிட்டுக் கொண்டிருக்கிறான்
நிரம்பிய நதியில் வலையிழந்தவன்

(Z) ***ஜபீர்***

தொடரியின் யன்னல் வழியே
வழியும் முந்தானை
வாசனையை உதிர்த்துவிட்டுப் போகிறது
கூழாங்கல்லின் படிமமாய்
அவள் முகம் சட்டென மறைகிறது,
அரை நிர்வாணச் சிறுவர்களின்
கையசைப்பில்
அவளின் புன்னகை இடம் மாறியிருக்கலாம்
வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தவன்
வார்த்தைகளுக்குள்
என்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன்...
சலனம் மாயபிம்பத்தின் மறு வடிவம்,
தொட்டுச் சிலிர்த்த குளிர் கரத்தால்
திரும்பிப் பார்க்கிறேன்
பட்டையழுக்குடன் அழகாயிருந்தவள்
பசிக்குது என்றாள்
வார்த்தைகளை உதிர்த்துவிட்டு
மீண்டும் புடைக்கிறேன்
எழுத்துகள்
இப்போது கண்ணீரோடு சேர்ந்து
சோறாக வெந்து கொண்டிருக்கிறது...

*முகமது பாட்சா*



தானென்று தெரியாமல்
தனக்குத்தானே முத்தமிடுகிறது
குழந்தையாய் சிரிக்கிறது
கண்ணாடி.

*க. மகுடபதி*

# வனாந்திர நடனம்

இந்த வனம்
நம் சொந்த வனமன்று

முகமற்ற தேசத்தில்
ஏதோ ஓர் விளக்கினை
கையிலேந்தி
எல்லா திசைகளிலும்
நம்மைப்போல
எவனோ ஒருவன்

எது நிதர்சனம்
எது தரிசனம்
ஏதொன்றும் அறியாது
நிழலாய் நகர்கிறது
கனவான நம்
கணப்பொழுதுகள்

அதே புலவு
அதே களிப்பு
அதே புணர்வு
அதே பிறப்பு
சே.....
மீண்டும் அதே
இறப்பும்

இந்த வனம்
நம் சொந்தவனமன்று

இங்கிருக்கும்
எதுதான்
எனது அல்லது உனது?
அல்லது
நமக்கான எந்த ஒன்றில்
உன் என்
பெயர் மட்டுமே
பதிக்கப்பட்டிருக்கிறது?

இந்த
உடல் இயந்திரத்தின்
சாவி எங்கே?

நம் உயிர் ஓடிகையில்
ஓசை என்ன?

நானே நான் என்ற
மமதை எங்கே போச்சு?
சாவில் வைத்தான் முடிச்சை
இனி
எல்லாம் விளங்கலாச்சு.

இந்த வனம்
நம் சொந்த வனமன்று

வனமா-
எனிலிது
வனமுமன்று.

உயிர் சுத்திகரிப்புப் பயணங்கள்
தாண்டிச் செல்வன
வனங்களையும்.

தும்பியின் கால்கள்
அறிவதில்லை
தன் மகரந்தப்பூக்களின்
கௌரவ விதைகள்.

**சுதந்திரன்**

# எனக்கும் கனவு இருந்தது

என்னிடம் ஒரு கனவு இருந்தது
வழக்கம்போல் தூக்கத்தில் வருவதோடு
சில சமயம் விழித்திருக்கும்போதும்
வந்து தொலைந்துவிடும் அது
மனம் வெற்றிடத்தில் வீழ்ந்திருக்கும்போது
வந்து இழுத்துச் செல்லும் அது
பல சமயங்களில் ஏதாவதொரு அவசரங்களில்கூட
மனதைக் கடத்திச் சென்றுவிடும்
கனவு என்றவுடன் இறந்த காலக் குப்பைகளோடு
சில பல எதிர்கால எதிர்பார்ப்புகளையும்
எங்கேயாவது நுழைத்துவிட்டுப் போய்விடும்

எந்த உலகத்தையோ மாந்தரையோ
மாற்ற முடியாதெனத் தெரிந்தும்
இந்தக் கனவு எதையாவது மாற்றச் சொல்லிக்கொண்டே
நகர்ந்து போனது பல தருணங்களில்
கனவு என்பதில் எனக்கான வாழ்க்கையை மட்டும்
இரகசியமாக கொடுக்கிறது அது

எனது கனவுகளிலிருந்து என்னை
அறுத்துக்கொண்டு ஓடும் போதெல்லாம்
கண்ணுக்குத் தெரியாத ஒரு கண்ணியில்
கால்கள் சிக்கியதை எப்போதும் உணர்கிறேன்

இப்போதும் கூறிக்கொண்டுதான் இருக்கிறேன்
எனக்கு ஒரு கனவு இருந்ததென்று!

*முனியாண்டி_ராஜ்*



கற்பூரத்தில் உழன்று
கற்பூரத்தில் உழைத்து
கற்பூரத்திலேயே கரைந்து போன
ஒரு சிறு கற்பூர வியாபாரியின்
மகள் நான்

எங்கள் வீடு எப்போதும் கற்பூரத்தாலும்
கற்பூர நெடியாலும் நிறைந்திருக்கும்
அந்த கற்பூர நெடிக்கிடையிலே தான்
நாங்கள் உண்டு உறங்கி, விளையாடி, படித்து வளர்ந்து வாழ்ந்து
வந்தோம்

எப்போது உறக்கத்தில்
கண்விழிக்க நேர்ந்தாலும் சரி அப்பா கற்பூர மெஷினை
இயக்கிக்கொண்டிருப்பார் அல்லது
கற்பூர வில்லைகளை எண்ணி
டப்பிக்குள் அடைத்துக்கொண்டிருப்பார் அல்லது
கற்பூர கட்டிகளை பாலிதீன்
கவர்களுக்குள் அடைத்து
அதை விளக்கில் வாட்டிக்கொண்டிருப்பார்
மெஷின் ஓடிக்கொண்டிருக்கும் போது
அதன் இரைச்சலில் அவர்
குரல் பிறர்க்கு கேட்காது
என்பதால்,
தனக்கு ஏதாவது தேவைப்படும் போதெல்லாம்
ஒரு ஸ்பானரை இன்னொரு
ஸ்பானரால் ஓங்கி அடிப்பார்
அந்த சத்தம் கொல்லைப்புறம் வரை கேட்கும்
அதில் அத்தனையொரு கம்பீரம் இருக்கும்
வீடு விட்டு தனியே தங்கிய
கல்லூரி விடுதி,வேலைப்பார்க்கும் போது
தங்கிய தனியார் விடுதி
கல்யாணத்திற்கு பின்
இப்போது என் வீட்டில்
என எங்கு தூங்கினாலும் சரி
சில நாட்களில் உறக்கங்களின் கனவுக்களுக்கிடையே
இன்னும் அந்த மெஷின் ஓசையும்
அப்பாவின் ஸ்பானர் ஒலியும் கேட்டப்படியே இருக்கும்.

அப்பாவை பார்ப்பதற்காக
குட்டி சத்யாவாக கண்விழிப்பேன்
பக்கத்து வீடுகளில் எங்கேயாவது ஃபோர் போட்டுக்கொண்டோ,
டிரில்லு பண்ணிக்கொண்டிருக்கும்
சத்தம் தான் அது என்று உணர்ந்த பின்
அப்பாவோ மெஷினோ இல்லாத,
இரவு விளக்கு நிரப்பிய
நிசப்தங்களை மட்டுமே சுமந்த
பெரிய சத்யாவின் அறையாக
அது காட்சியளிக்கும்..
அப்பாவின் மறைவுக்கு பின் அடித்த காலத்தின் காற்றில்
கற்பூர வியாபாரமெல்லாம்
கரைந்து போனது
இப்போதெல்லாம் கடையில் தான் கற்பூரம் வாங்குகிறோம்
அதை நுகர நேரிட்டாலும் அப்படி ஒரு வாசமோ, நெடியோ அதில்
இருப்பதில்லை
இருந்தாலும்...
எப்போதெல்லாம் துயரத்தின்
ஆழ் பள்ளத்தாக்கில்
நான் மூச்சு திணற நேரிடுகிறதோ
அப்போதெல்லாம் என்னை சுற்றி
நிறைந்து விடுகிறது
அப்பாவின் மீதான அதே கற்பூர நெடி..

சத்யா

அவன் பைத்தியம் என்றே அறியப்படுகிறான்.
தோளில் இரு பைகள் காகிதக்குப்பைகளோடு
அது பழைய காதல் கடிதங்களாகவோ
அல்லது கவிதைகளாகவோ இருக்கவேண்டும்.
ஒரு ஞானக்கிறுக்கனாய் இருப்பான் போலும்
சிலதை அவ்வப்போது பிரித்துப் படிப்பதும்
பின் கசக்கி எறிவதும்
சில நேரங்களில் கை ஆட்டி யாருடனோ
பேசிக்கொள்வதும்.... பதில் கிடைத்ததோ என்னவோ அதை எண்ணிச்
சிரிப்பதும்
கைகூப்பி நன்றி சொல்வதும்
இப்படி பாதிப்பொழுது போய் விடுகிறது...
இவன் பழைய காலத்தில் வாழும் பைத்தியம் என நிகழ்காலப்
பைத்தியங்கள் நாங்கள்
பேசிக்கொள்வதும் உண்டு...
ஒரு கோப்பைத் தேநீருக்கும் கடையில் கெஞ்சும் அவன் கோபக்காரன்...
தாமதமாய் தேநீர் வந்தபோது தரை குடித்தது.
கறையேறிப்போன பற்களும் முடை நாற்றமெடுத்த துணியும்
அவனடையாளம்.
எங்கள் தெரு குழந்தைகளுக்கு பூச்சாண்டி
என்பதை தவிர வேறு பெயரற்றவன்.
எது எப்படியோ நாங்கள் பைத்தியத்தை
மனிதனாக பார்க்காத பைத்தியங்கள் என்பது அவனுக்குத் தெரியாத
வரையில்
நாங்களும் மனிதனாக நடித்துக் கொண்டே இருக்கிறோம்!

**மதுசூதன்**

மழை ஓய்ந்தபிறகு
குடை விரிக்கறது
காளான்...

**கவிப்பிரியன் ஜீவா**



# தீரா வருத்தமுண்டு

உனக்கேதும் செய்ததில்லை நான்..!
ஆனால்
இன்னும்கூட
உன்னுடைய உதடுகளால்தான்
புன்னகைத்துக் கொண்டிருக்கிறேன்..!
நீ சுமந்து வந்து கொடுத்த
நெருப்பிலிருந்துதான்
கடும் பனிக்காலத்திலும் என்னால்
குளிர் காயமுடிகிறது..
நிரம்பித்தளும்பும் என் குளங்களின்
பெரும் பகுதிகள்.
உனது ஊற்று நீரால் மட்டுமே
உற்பத்தியானதென்பதை
அறிந்திருக்கவில்லை யாரும்....!.
எனக்கு முன்னால்
நீ நடந்து சென்ற பாதைகளில்
குருதி கசிந்து உறைந்து கிடக்கும்
தடங்கள் யாவும்
என் பாதம் படக்கூடாத பகுதியென
நீ உரைத்துச் சென்றது
இப்போதுதான் உரைக்கிறது...
அனலடிக்கும் வெளிகளில்
வெப்பக் காற்றையே போர்த்திக்கொண்டு
நாளெல்லாம் நடந்து செல்லும் உனக்கு
நானேதும் பெரிதாய்ச் செய்ததில்லை...
என்னைப் பற்றிய வருத்தம் மட்டும்
எப்போதுமுண்டு உனக்கு..!
விழிகளிருந்தும்
பிரித்தறிய முடியாத காட்சிப்பிழைகளால்
ஏமாற்றங்களின் பாறைகளில் மோதி
வீணாகிப்போகும் என் கண்கள்
ஒளியிழக்கும் நேரத்திற்குள்
உன் விழியிரண்டில் ஒன்றையேனும்
எனக்குத் தந்துவிடவேண்டுமென்ற
தீராத வருத்தம் மட்டும்
எப்போதும் உனக்கு உண்டு...

**சந்துரு**

உன்னை இனி
அழகென வர்ணிப்போர்
பற்றி அவதானமாயிரு
தேவைகள் தீராத
ஒரு நாளில் உனை
தீட்டென ஒதுக்குவோர்
காதில் உரக்கக்கூறு
ஒரு வெளியேறாத
தீட்டின் அருவருப்பான
உருவங்கள்தான் நீயும் நானும் என்று
பின் கண்ணாடி முன் நின்று
பெருமையாய்
மூச்சுவிடு பெண்ணே..!
நீ பவித்திர அக்கினியின் பிள்ளை

**அனாதியன்**

மரம் மட்டும்தான் தேவை
நிழலை கொடுக்க எந்த பஞ்சமும் வைப்பதில்லை வெயில்..!

**க.ராஜகுமாரன்**

ஒரு ஊரை கைபிடித்து
இன்னொரு ஊருக்கு அழைத்துச் செல்வதில் இருக்கிற
சிரமம் அறிந்தவன் நான்.
எவ்வளவு சொல்லியும் கேளாமல்
பிடிவாதமாக என்னோடு வந்துவிட்டது எங்களூர் புங்கைமர நிழல்.
ராட்ஷச கட்டிடங்களின் கருநிழல்கள் அதை கடித்துக் குதறுவதை
என்னால் காணப்பொறுக்கவில்லை.
குளியலறையில் என்மீது தெறித்து விழும் நீர்த்திவலைகளில் எங்களூர் குளத்துமீன்களின்
முகச்சாயல் இருக்கிறது.
காற்றைக் கடையும்
மின்விசிறியின் அடியிலும்
எனக்கு கேட்கிறது எங்களூர் ஆய்ச்சியரின் மத்தோசை.
நாற்சந்திகளின் குறிக்கை விளக்குகளென உருண்டை உருண்டையாக
அமர்ந்திருக்கின்றன எங்களூர் வண்ணக் குருவிகள்.
ஒருவழியாக
ஊரை அழைத்துக் கொண்டு பண்டிகையைக் கொண்டாட
ரயிலேறக் கிளம்பிவிட்டேன்.
ஆனால் இப்போது
என் காலைக் கட்டிக்கொண்டு அழும் இந்த நகரத்தை எப்படிக்
கூட்டிச்செல்வேன் என் ஊருக்கு?

**கார்த்திக் திலகன்**



காந்தியின் இரத்தம் சிரித்தது!
மூன்று தோட்டாக்கள் அழுதன!
இறுதிவரை...
அகிம்சையை கொல்ல இயலாததால்...!

**அ. பெர்னாட்ஷா**

ஆம்
உங்கள் தேசத்திலிருந்து வெளியேறியது நான் தான்..

வேறொன்றுமில்லை
மனமெனும் கண்ணாடிக் கோப்பையினை கருணையின்றி போட்டுடைத்து விட்டீர்கள்..

சிதறிய துண்டுகளை சேகரித்துக் கொண்டு
உங்கள் தேசத்திலிருந்து மிகத் தொலைவாய் பயணப்பட்டு ஒரு புதிய தேசத்திற்குள் சரணடைந்து விட்டேன்..

இனி உங்கள் தேசத்தில்..
என் பூக்களின் வாசனை வீசப்போவதில்லை..

உங்கள் சொற்களின் வெப்பம்
இனி ஒருபோதும் எனை தீண்டிடாத வண்ணம் இத் தேசத்திற்குள் மிகப் பத்திரமாய் ஒளிந்துக் கொண்டாயிற்று..

எனதிந்த தேசத்தில்
சொல்லிக் கொள்ளும் படி எதுவும் இல்லையென்றாலும்..
என் சிரிப்பிலோ அழுகையிலோ எவருக்கும் அக்கறையில்லை என்றாலும் கூட
இத்தேசத்திலேயே தங்கி விடப்போகிறேன்..

இத் தேசத்தில் எனக்காய் யாருமில்லை..
ஆனாலும் எல்லாம் இருக்கிறது..

இந்த பூமி
இந்த வானம்
இந்த வாழ்க்கை
எல்லாம் என்னுடையது!!

உங்கள் தேசத்தின் நேசப்பறவைகளை எனதிந்த தேசத்திற்குள் மறந்தும் அனுப்பி விடாதீர்கள்..

இனி
உங்கள் பரிவான சொற்களோ..
அரவணைக்கும் கரங்களோ..
உயிர் மீட்டும் பார்வைகளோ..
எனக்கொருபோதும் அவசியப்படாது..

இது எனக்கான வானம்
இது எனக்கான கனவு
இது எனக்கான கண்ணீர்
இது எனக்கே எனக்கான வாழ்க்கை..

இதில் எழுந்தாலும் வீழ்ந்தாலும்
இது எனக்கான தேசம்
நான் இங்கே தான் உயிர் தரித்திருப்பேன்..!!!

ரிஸ்கா முக்தார்

# வேகம்

பிரபஞ்சக் குடுவையினுள்
ஆழ்துயிலில் விஞ்ஞான பூதம்

விளையாட்டுச் சிறுவனின்
துறுதுறுப்புக் கரங்களாய்க் காலம்

தெறித்து விழுந்தது தக்கை
பேருரு கொள்ளும் பூதம்

இன்னும் இன்னும் அதன் போதாமை
அச்சுறுத்தும் விரட்டும்

கால் பிடறிபட தொடரும் ஓட்டம்
இளைப்பாற அவகாசமற்று
இரைக்க இரைக்க இடறி விழுந்தவைகளை
இரையாக்கிக்கொண்டு
இன்னும் வேகமாய்...

சக்திஅருளானந்தம்

# அதனிலும் சிறந்ததாய் தரையிறங்கல்

சில பறவைகள் கண்களுக்கு
கூம்பு வடிவில் தென்படுகின்றன.
தம் அலகை மழைத்துளிகளுக்காய்
ஏந்துபவை போல்..,
நட்சத்திரங்களின் ஒளிர்கை
நடுநிசியில் தருக்கள் அடர்
பெரு வனத்தில்
இலைகளைக் கிழித்தபடி
கூர்மையாய் விழிகளில் இறங்குகிறது..,
வயோதிகனின் பழுதுபட்ட
மூக்குக் கண்ணாடியைச் சுற்றிய
பூ கட்டும் வெண்நூல்
நிறம் மாறி; விரலழுக்கின்
வண்ணேமேறி இருப்பை
ஸ்திரப்படுத்துவதை தவிர்த்தால்
அவனது நீள் உருளை வடிவ
பொடி டப்பாவினை எடுக்க முனையும்
நுனி விரலின் நடுக்கத்தை
மிகச் சரியாய் படம் பிடித்து விடலாம்..,
விறகு பிளக்கும் வலியவனின்
முதுகில் மினுங்கும்
வியர்வைத் துளிகளின்
திவ்ய மணம் செவிகளில்
மோதுவதை நிறுத்த
யாரேனும் சிறு துண்டுத் துணியை
அவனிடம் நீட்ட
நிர்பந்தப்படுத்தப்படுகிறீர்கள்
இப்போது.

வேதநாயக்



இரட்சிப்பின் முத்தங்களால்
மீட்சியடையும் பனிக்கால இரவொன்றில் கதகதக்கும் உனது
மார்புச்சூட்டின் சுழிவிற்குள் மெல்ல மலரத்தொடங்கியது அந்த இரவு

எல்லா வரையறைகளையும் தகர்க்கிறது
உந்தன் ஈர உதடுகளின் மென்னுரசல்

சற்றே சிவந்த கண்களில் நிறைந்த காதலில்
துளித்துளியாய் சொட்டும் காமம்

ஒற்றை முத்தம் துவங்கி
ஒவ்வொரு முத்தத்திற்கும் அதிர்ந்தடங்கும் உயிர்

பனிபடர்ந்த சங்குப் பூவொன்றின்
நுனியில் தொக்கி நிற்கும் ஒற்றைத்துளியினை ஸ்பரிசிக்கும்
பட்டாம்பூச்சியின் சிறகசைப்பாய் துடிக்கும் உதடுகளை மெல்ல மெல்ல
உரசும் உந்தன் உதடுகளில்
மிச்ச வாழ்விற்கான ஜீவன் நிரம்பிக்கிடக்கிறது

தாளவியலாத உணர்வுகளின்
ரகசிய முனகல்களை எதிரொலிக்கிறது
உன் இதயத்துடிப்பு

வீழ்ந்து கிடக்கும் பள்ளத்தாக்கிலிருந்து
விரல் பிடித்து உயிரின் அத்தனை முகடுகளுக்கும் இட்டுச் செல்கிறது
உந்தன் வருடல்

எடுக்க எடுக்க குறையவுமில்லை
கொடுக்க கொடுக்க தீரவுமில்லை

என்னை மீட்டுக்கொள்ளவியலாத தவிப்போடு உன் முகத்தை
கைகளிலேந்தி மார்போடு அணைத்துக்கொள்கிறேன்

கரைந்து கரையேறுகிறது நம் இரவு
உன்னை என்னிலும் என்னை உன்னிலும்
இடம் மாற்றியபடி...

**ஜானு இந்து**

பத்து ஆண்களும் ஒற்றை நானும்
புழங்கும் அலுவலகம்;
எவ்வளவோ முயன்றும்
எந்தன் பிரத்யேக
கோரிக்கையை அசட்டை செய்யும்
தலைமை ஆண்;
அனாயசமாய் அவனை
ஆமோதிக்கும் சக ஆண்கள்;
உங்களுக்கெல்லாம் புரியுமா,
மணிக்கொருதரம்
உதிரம் உந்தும்போதெல்லாம்
நீங்கள் பொதுவுக்கல்லவென
பூட்டு பூட்டி வைத்திருக்கும்
கழிப்பறை சாவியை
மிகக்கூசி கையிலெடுக்கும் அவஸ்தை;
நீங்கள் புகைத்துப்போட்ட
சிகெரெட் கூட தந்துவிடுகிறது
நீங்களே ஸ்தூலமாய்
நிற்பது போன்ற அக்கொடும் பிரமையை;
ஒவ்வொரு முறையும் அந்த
நான்குக்கு நான்கு அறையில்
நீங்கள் பார்க்க பார்க்கத்தான்
பஞ்சு மாற்றி அவசரமாய்
வெளியேறித்தொலைக்கிறேன்...

**கோ. ஸ்ரீதரன்**

# கிறுக்கப்படாத சுவர்கள்

சொந்த வீடுதானென்றபோதும் கூட நான்காவது படிக்கும் பாப்பாவையும்
எல்கேஜி படிக்கும் தம்பியையும் ஒருமுறையும் அனுமதித்ததே இல்லை
சுவர்களில் கிறுக்க

ஊஞ்சல் உரசிய கோடுகளையும்
கதவு கிழித்த வடுக்களையும்
அவ்வப்போது வண்ணம் தீட்டி மறைத்துவிடுவார் அம்மா

கட்டியபோது தீட்டிய வண்ணங்கள்
ஐந்து வருடங்களாகியும்
அப்படியே இருக்க

ஆறுமாதங்களுக்கு முன்பு
வாடகைக்கு வந்தவர்கள் காலி செய்தபோது அவர்களிருந்த
வீட்டு சுவர்களில் எல்லா வண்ண கிரையான்ஸ்களும் கோடுகளாகவும்
எழுத்துக்களாகவும் உருமாறியிருந்தன

பாப்பாவுக்கும் தம்பிக்கும்
விதிக்கப்பட்டிருந்த தடை
யார் யாருக்கோ படையல் வைத்திருந்தது

கிறுக்கப்படாத சுவர்களும்
தகர்க்கப்படாத தடைகளும்
இப்போதும் மிச்சமிருக்கின்றன

வரைய முடியாத கோடுகளைப்போலவும்
வாழ்ந்து விடாத வாழ்க்கையைப்போலவும்

தனபால் பவானி



எனக்கும் உனக்குமான முரண்பாடுகள்
அதிகரித்து கொண்டே போகின்றன

அதனால் ஏற்பட்ட,
உறுத்தும் இடைவெளியை
என்ன செய்வது..!

அதனை சுருட்டி படுக்கையறையில்
கட்டிலின்கீழ் மறைத்து வைத்தேன்...
உறக்கம் கெட்டது

வரவேற்பறையில்
அலங்காரப் பொருட்களுடன்
அடுக்கி வைத்தேன்..
உரையாடல் கெட்டது

சமையலறையில்
மளிகைப் பொருட்களுடன்
மறைத்து வைத்தேன்..
சுவை கெட்டது

பூஜையறையில்
பராசக்திக்கு பின்னால் பதுக்கி வைத்தேன்....
பக்தி கெட்டது

குளியலறையில்
குழி தோண்டி புதைத்து வைத்தேன்...
சுத்தம் கெட்டது

தோட்டத்தில்
பூந்தொட்டி ஒன்றின்கீழ்
ஒளித்து வைத்தேன்..
வாசனை கெட்டது

என்ன தான் செய்வது
நம் இடைவெளியை?

மீண்டும் பழையபடி
நமக்கிடையே வைத்து விடுகிறேன்

நம் நேசம்
எக்கேடு கெட்டால் நமக்கென்ன...!

**சசி சிவதாசன்**

நாற்கர நெடுஞ்சாலையின் மையத்தில் வெட்டிய பின்னும்
வளர்ந்து
தலை நீட்டும்
அலங்கார செடிகளை
புகை படிந்த
காற்றின் கரங்களில் வருடி
வழியெங்கும்
மன்னிப்பு கேட்ட படியே
விரைகின்றன வாகனங்கள்...

மன்னிப்பு கோறுதலும்
ஆமோதித்தலுமாக நடைபெறும்
இந்நிகழ்வின் பிண்ணணியில்
அச்சாலைக்கடியில் புதைந்து கிடக்கின்றன

சாலைக்காக வெட்டி புதைக்கப்பட்ட கோடிக்கனக்கான
மரங்களின் கல்லறைகள்....!!

**வணவை தூரிகா**

# மஞ்சள் மழை

கோவிலுக்குள் இருந்த கடவுள்
மழையாகிக் கொண்டிருந்தார்
மழைக்கொதிங்கிய நாம்
கடவுளாகிக் கொண்டிருந்தோம்

கன மழையை உன் அருகாமை
அள்ளி வீசியது
காற்று இடி மின்னலை
உன் இடைவெளி கிள்ளி வீசியது

தொடாமல் பதிந்த மூன்று முத்தங்களை
முதலில் முத்தமாக்கியது மழை
பிறகுதான் உதடு

மழைக்கும் சேர்த்து சிரித்தாய்
மஞ்சளாய் மிதந்தாய்

மிஷ்கின் பட வீதியாய்
நிறைந்தது நம்மை தீட்டிய மெர்க்குரி சாரல்

'தலைக்கு குளிச்சியா' என்று கேட்டேன்
தொட்ட மழை தாண்டி
'தவத்தில் குளித்தேன்' என்றாய்
தொடாதோ மழை வேண்டி

மனம் நிறைந்து மழை வரைந்து
இறங்கினோம்
சுடு சுடுவென சொட்டிய மழையில்
கைகள் கோர்த்தாய்

பிறழ்வு நிலைக்குள் பற்கள் அடித்தன
பிந்தைய கனத்தை முதுகில் ஏற்றினாய்
கழுத்துக்கு தாவிய முகத்தை
மழையோடு இசையாக்கினாய்

பிறகு அற்றைப் பொழுதில்
மீளா துளி ஒன்றாய் பூமி தொடாத
நிகழ்வுக்குள் சுழலத் துவங்கியிருந்தது
தாபத்தின் நகங்களென எங்கு
திரும்பினும்
நம் மஞ்சள் மழை

கவிஜி



# ஒட்டுபோட்ட கால்சட்டை

*வாங்கி வராத*
*கணக்கு நோட்டிற்காக*
*அடிவாங்கிய போதெல்லாம்*
*அப்பாவை சபித்திருக்கிறேன்!*

*ஒட்டுபோட்ட கால்சட்டையின்*
*கிழிசலை மறைப்பதிலேயே கழியும்*
*தோழிகளுடனான எனது நட்பு!*

*பள்ளியற்ற மதியங்களில்*
*நிம்மதி பெருமூச்சி விடுவேன்*
*தயிர்சாதம் குறித்த கேலியிலிருந்து*
*தப்பித்ததாய்!*

*எல்லோரையும்ப் போல்*
*ஆண்டு விடுமுறையை*
*அவ்வளவாக*
*எதிர்பார்க்க மாட்டேன்...*
*ஏதோவொரு கடையில்*
*எடுபிடியாக சேர்வதில்*
*எனக்கு சம்மதமில்லை!*

*அத்தனையும் தாண்டி*
*தேர்வில்*
*வெற்றிபெற்று விடுவேன்...*
*அப்பா மேய்க்க விடுவதாக சொன்ன*
*பன்னிகளுக்கு பயந்தே!*

***இனியவன் சதீஷ்***

*முன்னிரவு கடந்து*
*பின்னிரவுத் தொடக்கத்தின்*
*சிந்தனையில்*
*தூரமாய்க் குரைக்கும்*
*நாயின் குரலில்*
*மீண்டும் கலைக்கப்பட்ட*
*மௌனத்தில்*
*கடிகார முட்கள் மட்டும்*
*உயிரோட்டமாக!*

*நிரப்பப்பட்ட பேனாவின்*
*மையும் தீர்ந்துபோக*
*குப்பைத்தொட்டியில்*
*நிறைந்த காகிதங்கள்*
*நெளிந்து விரிந்துகொண்டிருந்தன!*

*பின்னிரவின் இறுதியில்*
*கற்பனை நிரம்பிய*
*எழுத்துக்களை யாரோவின்*
*பிடியில் இறுகிய மனதோடு*
*வெளிப்படுத்த முடியாமல்*
*மௌனத்தின் சாயலில்*
*வழிந்தோடும் கண்ணீரில்*
*கரைந்து வழிந்துபோனது*
*கடைசிக் காகிதத்தில்!*

*உறக்கத்தின் தொடக்கத்தில்*
*விடிந்திருந்தது மறுநாள்!*

***பொள்ளாச்சி சசிக்குமார்***

# எவருமே கவலைப்படவில்லை

அதிர்வேட்டுடன் அம்மன் ஊர்வலம்
கொட்டுமேளம் நாகஸ்வரத்தில்
சிலரே ரசித்தபடி!
ஆண் பூதம் பெண் பூதம் என
வேடத்துடன்
வாயில் நெருப்பு ஊதி
அதிரவைக்கும் இருவருடன்
திரளான சிறுவர் கூட்டம்!

தேர் பெரியதெரு நடுத்தெரு என
மேட்டுக்குடிகள் பக்கமாய் முதலில்
நகர்கிறது....
கரகாட்டம் பொய்க்கால் குதிரை
ஆட்டக்காரர்கள்
சுழன்று சுழன்று ஆடிக் கடைசியில்
கோடித் தெருவுக்கு வரும்போது.....
களைத்து வெறுமனே நடந்து வந்தனர்!

கண்விழித்துக் காத்திருந்து
ஏமாற்றமே மிஞ்சியது....
'இது இரவுத் தேர் அப்படித்தான்....
பகல் தேர் நிகழ்வில்
பார்த்துக்கொள்ளலாம்' ....இந்த
ஆறுதல் வார்த்தைகளோடு
தூங்கிப்போயினர் எளியோர்களின் பிள்ளைகள்!
ஆனால்
சேரிக்குள் வராத தேரைப் பற்றி
எவருமே கவலைப்படவில்லை!

கா.ந.கல்யாணசுந்தரம்



சப்பாது அணியாத கால்களுக்கு
தாத்தா சற்றுமுன் துப்பிய
எச்சில் சாபமென்று
துடைத்தெறிய துடித்தேன்
எனக்கு முன் முந்திகொண்டது ஈக்கள்
குடும்பம் சோப்பு மணக்க
குளித்த அழுக்கு குவியல்
மண்ணுக்கு மலட்டை தந்திடுமோ என்று
கழிவுநீர் வடிகாலுக்கு கண்ணீரோடு
சென்றேன்
சுமக்கும் மண்ணை
சுத்தம்செய்யவதாய்
தின்று செரித்தது பன்றிகள்
கௌச்சிபாத்திரம் புலங்காது
நீர்மாத்தி நெய்வேத்தியம்
படைத்தது மிடரை கடந்தால்
ஐவ்வாதாய் மணக்க போகின்றது போல
கழிவறை கழுவியத்தற்கு கூலியை
தூக்கிபோடும் பாட்டிக்கு
நம்மிடமிருந்து வருவதும்
நரகல்தான் என்று தெரியுமோ
அடுக்குமாடியிலிருந்து குப்பையை
வீசிவிட்டு அள்ளிக்கொண்டிருப்பவனை
குப்பைகாரனென்று கூப்பாடு
போடுகின்றாள் அம்மா
கவனிப்பதை நிறுத்திவிட்டு
பொங்கி எழுந்து கேட்டதற்கு
பொறுமையாய் சொல்கின்றார் தாத்தா
புன்னிய நீராடல்
புன்னிய தளம்
புன்னிய தர்மம் என
பட்டியல் நீளும்போதே
பொரித்தட்டியது பழி ஒருபக்கம்
பாவம் ஒருபக்கம் என்று
இனி வேற்றுகிரக வாசிகளுக்கு இனி
விளக்கம் சொல்லாதீர்கள் அப்பா.......

*மலர்*

# சோடாபுட்டி

மாற்றுக்குவளையில் தேநீரா..
மறுதலித்து
சோடா குடிக்கப்பழகும்போது
ஒற்றைக்கரத்தால்
புட்டியின் கழுத்தைப்பிடித்து
தூக்கி நெறித்து
மொத்த கோவத்தையும்
ஆட்காட்டி விரலின் முனையிலேற்றி
கொக்கிபோல மடக்கி
மூடியிருக்கும் கோலியில் இறக்கி
தெறிக்கவிட்டுக் குடித்தது
சோடாவையல்ல
காலங்காலமாய் எம்மீது
காழ்ப்பை உமிழ்ந்து
காட்டுமிராண்டியெனச்சொன்ன
உம்போன்றோரின் ரத்தத்தை.

*வினோத்குமார்_பா*

# முட்குடைகள்

இக்கணம் ஏதேனும் ஒன்றாக உருமாறி விட வேண்டும்
முடங்கியிருக்கும் சிறகுகளை அகன்றதாய் விரிக்கும் பறவைகள்
பொருந்துமா

பசையின்றி ஒடுங்கிய
பாழ்நரம்புகள் எங்கனம் பிதிர்ந்து இசையும்

காற்றைக்கிழித்து வார்த்தைகளால் கீறிய அலகுகளை
வானிருந்து எறும்புகள் என எள்ளிநகைத்துத்
தேற்றிவிடும் தேட்டம்

நாட்டத்தில் விழாத தீங்கனி மேல் நாடியே பறித்துக் கொய்து
துரதிஷ்டம் துரத்திடத் தோன்றும் பெருங்கனா

வண்ணங்களையும் எண்ணங்களையும் ஒருங்கே பிசைந்த வானரும்பு
வளைகோடு மேல்

வகிடுகள் வரையும்
வானவில் ஊர்தியின்
பேரிரைச்சல் கிழிக்கும் பட்சியின் வாதை

ஏன் எதற்கு என்னும் எல்லா வினாக்களுக்கும் செவிகளை
உதிரச்செய்து சற்றே மறைந்திருந்து
வனம் பதுங்கும் தாகம்

வானிலைக்கு மட்டுமே

வாதனாளி நனைய ஒரு மிடர் பருகிக் களிக்கும்
சொற்பத்தகிப்பு
அற்பக்குடை முட்களுக்கு

வெறுமனே ஒன்றையொன்று பேசிக்கொள்வதைத் தவிர
அவற்றால் ஏது இயலும் இப்போதைக்கு?!

மின்ஹா (மின்மினி)



.

பிறப்பு இறப்பின் கட்டளையில்
கட்டமைக்கப்பட்ட வாழ்வின் தாத்பரியங்களை
அடிபணிந்துப் புரளும் நறவல் புழுக்கள்
அழைப்பிதழ் விடுத்து
மரணத்தை விரும்பி அழைக்கும்
சர்பங்களின் பசி தீர்க்கவென
குளத்துத் தவளைகள்
தொலைத்த தனதொளியைத் தேடும்
அமில மஞ்சள் விரவிய தார்ச்சாலைகளில்
இறக்கைகள் உதிர்த்த மின்மினி கள்
தனியே திரியும் ஓனாய் ஒன்றின்
குரூரங்கள் நிறைந்த பார்வையில்
பேரடர் காட்டின்
கடைசிப் பக்கங்களை புரட்டிச் செல்லும்
கொஞ்சம் கொஞ்சமென செல்லரித்து
மனக்கொட்டையில் விசித்திரமாய்
சிதையும் ஞாபகச் சுழலில்
மாம்பழ வண்டுகள்
பரிகாசம் கொட்டி திண்டில் தாவிச் சென்று
மதில் மேல் ஏறி நிற்கும்
முழுமையாய் கருமை கொண்ட
பூனையின் மின்னும் தன் கண்களின் வழியே
எச்சம் தின்ன வந்த
சிரங்கு படர்ந்த நாய் ஒன்றின்
வாய்வழி சொட்டும் உமிழ்நீர் வாயிலாக
உயிர் நீர் உமிழும்
வறண்ட பாலை நிலங்களின் பாதைகளில்
செய்திகள் கொணரும் மழைத்தும்பிகளின்
இறகுகளில் வடியும் நீர்த்துளிகள்
முகமறியா அனாமதேய
பறவையொன்று கணம் கூடிய
கடைசி சுவாசத்தை தூக்கிப் பறக்கும்
புதியதாய் வேறொரு கூடு தேடி

தொலைதூரத்துக் குயிலின்
மென்கூவலில் செவிகளில் வந்தடையும்
ஒலி அலைகளின் இடைவெளியில்
ஆழ்கடல் அமைதிதனை
உணர்ந்தவர் யார் யார்

ர. மதன் குமார்

அதிகாலை கிழக்கில்
அம்மாவின் ஞாபகம்.
மைய நெற்றியில் சிறுபுள்ளியிட்டு
அதை மெல்ல மெல்ல விரிவாக்கி பொட்டிடுவாள்.
வட்டமென்றால் அதுதான் வட்டம்
அவ்வட்டம் பொறியியல் படித்த
என்னால் இதுவரை இடவியலவில்லை.
அழகை அவள் உருவாக்கிவிட்டு
என் கண்ணத்தில் கண்ணேறுபொட்டிடுவாள்
கிழக்கு திசையில் யோசித்தபடி நான்
மெல்ல எழுகிறான் அதிகாலைச் சூரியன.

துரை.நந்தகுமார்

வீடு திரும்பியதும்
வேலைப்பளுவை
இறக்கிவைக்கின்றேன்...

மகளெனும்
உப்புமூட்டையில்.

ஆனந்த்

வெற்றிலை மணத்தோடு
சுண்ணாம்பு தோய்ந்த
சுருக்குப்பை காந்திகளுக்கு
இருளிலிருந்து வெளிச்சம்
ஞாயிறன்று பிறக்கும்!

அஞ்சறை பெட்டிவாழ்
சீரகமண காந்திகள்
ஞாயிற்றுக் கிழமைகளில்
நடைபயணம் மேற்கொள்வர்!

ஐவ்வாது மணக்கும் காந்திகளுள் சிலருக்கு
ஞாயிறு காலைதான் விடுதலை கிடைக்கும்!

புதிதாய் பிறந்த சலவை காந்திகளுக்கும்
துணிக் குட்டையிலிருந்து
துள்ளி எழுந்து போவார்கள்!

எல்லா காந்திகளும் ஏற்றத் தாழ்வின்றி
கறிக்கடைக் காரரின் கல்லாப் பெட்டியில்
சந்தித்துக் கொள்வார்கள்!

இரத்த வாடையிலும்
புன்னகைப்பதில் – சங்கடங்கள்
இருப்பதாக தெரியவில்லை
எந்த காந்திகளுக்கும்!

**வினோதன்**



மன்னிக்கிறார் பாதிரியார்
விலைமகள் பாவங்களை –
புனிதமடைகிறது தேவாலயம்.

**முனைவர் வே. புகழேந்தி**

.

கேள்விப்படாத கேள்விகள் கேட்கப்படுகின்ற போதுதான்
கேள்விகள் மீதொரு
கேள்வி இல்லாமல் போய் விடுகிறது.

கேள்விகள் சுகமாய்தான் இருக்கும்
விடைகள்தான் எப்போதுமே
சுமையாகவே இறுக்கும்.

விடை தெரிந்த கேள்விகளை
யாரும் ஒரு கேள்வியாக எடுத்துக்கொள்வதில்லை.

விடை தெரியாத கேள்விகளை
எவரும் விருப்பமாக ஏற்றுக்கொள்வதுமில்லை.

கேள்விகளை விளாசுவதையே
பலரிங்கு வேள்வியாக வைத்துள்ளார்கள்.

விடைகளை அலசுவதற்கும்
சிலரிங்கு வேள்விகளை நடாத்துகிறார்கள்.

ஒருவகை சந்தேகங்களுக்காகவும்
கேள்விகள் கேட்கப்படுகிறது.
ஒருவரை சாய்த்துவிடுவதற்காகவும்
கேள்விகள் கோர்க்கப்படுகிறது.

தகவல்களை தெரிந்து கொள்ளவும்
கேள்விகள் கேட்கப்படுகிறது.
தராதரம் புரிந்து கொல்லவும்
கேள்விகள் வார்க்கப்படுகிறது.

அவ்வண்ணமே இன்றளவும்
இயற்கையும் கற்றுத்தராத
பல கோடி கேள்விகள் உண்டு.

நனைந்த பிறகும்
பூ எப்படி மணக்கும்?
வாசமான ஒரு கேள்வி.

பட்டாம் பூச்சியின் இந்திரியம்
எத்தனை நிறத்தில் இருக்கும்?
மோசமான ஒரு கேள்வி.

வானம் முடிந்த பிறகு
என்னவெல்லாம் இருக்கும்?
சந்தேகக் கேள்வி.

கானம் பாடும் எல்லாக் குயில்களின்
குரலும் எப்படி ஒரே மாதிரி இசைக்கும்?
சங்கீதக் கேள்வி.

கரு மேக மூட்டத்தில்
மழையொரு கேள்வி.
கடலலை ஓட்டத்தில்
கடலே ஒரு கேள்வி.

தென்றலுக்கு பின் வரும்
காற்றொரு கேள்வி.
காற்றுக்கு பின் வரும்
புயலொரு கேள்வி.

இதை வாசித்து முடித்த
அடுத்த நொடியில்
என்ன நடக்குமென்று தெரியாத வரை..,

உயிர் ஒரு பெரும் கேள்வி..?

**செல் வா மத்துகமை**

பத்து தளம்கொண்ட
அந்த
பன்னாட்டுக்கம்பெனி
இயங்கும் வளாகத்தில்
தரைத்தளத்து
படிக்கட்டருகே இருக்கும்
பத்துக்குப்பத்து
அறையில் இருந்தபடி
மேலும்கீழும் செல்லும்
மின்தூக்கியை இயக்கும்
பெரியசாமியிடமும்....
அதேவளாகத்தின்
ஐந்தாவதுதளத்தில் இயங்கும்
அலுவலகத்தின் தரைக்கு
மாப் போட்டுக்கொண்டிருக்கும்
அவனது மனைவியிடமும்.....
வீட்டில் இருவருக்கு
வேலையும்
குடியிருக்க வசதியான
வீடொன்றும் தருவதாய்
சொல்லித்தான்
அந்த இடத்தை
அபகரித்திருந்தது -
அரசாங்கம்.........!

**அழ. இரஜினிகாந்தன்**

அடைவதற்கு ஏதுமில்லை
அதற்குத்தக ஓடக்காரன்
கடப்பது சும்மா

**தஞ்சை தவசி**



.

தினமும்
கடந்து செல்லும் மரம்தான்...
நெடு நெடுவென வளர்ந்திருக்கிறது
கிளை பரப்பியிருக்கிறது
தளிர் நிரம்பியிருக்கிறது
மொட்டு விட்டிருக்கிறது
பூத்திருக்கிறது
காய்த்திருக்கிறது
பழுத்திருக்கிறது
பிரதான சாலையின் நடுவே இருக்கிறது.
இனி ஏதோவொரு கடவுளையோ
கட்சிக்கொடியையோ
துணைக்கு நிற்க வைக்க வேண்டும்....

**தோழன் பிரபா**

மேற்கே போகும் ரயில்
விரட்டி விரட்டிப் பிடிக்கிறது
சூரியனை

அந்திப் பறவை பாவம்
அது அறியாது
நட்சத்திர வானம்

மேற்கின்
ஒவ்வொரு விளிம்பும்
இன்னொரு கிழக்கு

இரவு என்று ஒன்றில்லை
அது காலப் பறவையின் நிழல்

**கவித்தாசபாபதி**

மண்ணை விட்டு
பன்னாட்டு விமானத்தில் பறக்கும்
உறவுப் பட்சிகள்

வியர்வை துளி சொட்டும்
வயிற்றுப்பசி சட்டைப்பை
தடவி இருப்பு பணத்தை
ஈடு கட்டி கணிதம் பார்க்கும்

இரவு உடுப்பு மனைவியின்
வாசம் நிறைந்தே நாசி புகும்
உலகம் சூனியமாகும்
மாதம் ஒன்றாம் தேதி தீபாவளியாகும்

நிறைகர்ப்பவதியாக்கி விட்டு
தரை மீது பாதம் பதியாமல்
நகர்ந்த இயந்திரக் கணவன் நான்

கைப்பேசி தொடுதிரையில்
குழந்தை முகம் தடவி முத்தமிடுவேன்
காசோலை நிரப்பிய வெண்காகிதம்
அகவை மூன்று விழுங்க
உயில் எழுதியிருப்பேன்

வாசனை திரவியமாக கமழ
நசுக்கிப்பூட்டப்பட்ட ஆண்மலர்கள் நாங்கள்


**மதுரை சிக்கந்தர்**

கடந்து செல்பவர்களின் கருணைக்கு
சாலையில் காத்திருக்கிறார்கள்
ஓவியனும், கரிக்கோடுகளாலான கடவுளும்.

**ஜி.சிவக்குமார்**

பறவையின்
இறப்பட்டையைக் கடித்தவனை விமானம்
விழுங்கியிருக்கிறது
வழி தப்பிய தேனீக்களை
அடிமையாக்கிய தாவரம்
மதுவைப் பரிமாறி
மகரந்த விலங்கிட்டிருக்கிறது
கடல் நீரை மிதித்த கலங்கள்
இதயத்திலிருந்து நிரந்தர விலக்கமும்
மூழ்கியவைகளுடன் முகங்களும் மறைக்கப்பட்டுவிட்டன
தோண்டிய குழிக்குத்
தப்பிய புவியின்
வேர்கள்
மலைகளாக காற்றாலைகளுடன்
நடுங்கிக் கொண்டிருக்கின்றன
உரிக்கப்பட்ட
நரம்பாக நதிகள்
இணைப்பில்
உயர் கட்டிட அழுத்தம்
அடைத்திருக்கிறது
குளக் கண்களைக்
குடைந்து மீந்த
படலம்
வெடிப்பில்
நீர் கழும்புக்கு ஏங்கி நிற்கிறது
அதோ
நெருப்பு வலி கொடுத்துப் பிறந்த இறுதி மனிதன்
உயிரைப் பிளந்து
அதற்குள்
வலியை
திரும்பப் பெறுகிறான்

சே தண்டபாணி தென்றல்



.

என்னுள் இருக்கும் தேவதையின் தொலைந்த சிறகுகள் தேடி
அலைந்துகொண்டிருக்கின்றேன்

நீயோ உன் வெண்ணிறப்புரவியைக் காணாமல் தவித்தபடி
தேடிக்கொண்டிருக்கின்றாய்

நீ ராஜகுமாரனாகவும்

நான் தேவதையாகவும் இருந்த காலங்கள்

கருப்பு வெள்ளைக் கனவுகளாகி விடுவதில் நமக்கு சிறிதும் விருப்பமில்லை

எழுதுகோல் தூரிகையில் கவிதையின் வண்ணமெடுத்து

என் எண்ணச் சிறகுகளுக்கும்,

உன் கற்பனை புரவிக்கும் குறைந்த பட்சம் வெண்ணிற வண்ணமாவது
அடிப்போம் வா

**அகதா**

சோலாப்பூர் போர்வையை விலக்கி
எழமாட்டேன் என
அடம்பிடிக்கிறது ஒரு அதிகாலை.
அம்மு என அதற்கு செல்லமாய் வைத்த பெயரை
வளைத்து நெளித்து
ம் என்ற குரலோடு
ஒறுக்கலித்துக் கொள்கிறது
தன் மெய்யெழுத்தை.
தட்டி எழுப்ப குனிந்த கழுத்தை
கட்டிக்கொண்டு உறங்க முடிகிறது
சுப்ரபாதம் பாடி எழுப்ப முடியாத எனது கடவுள்.
சாத்தானின் குரலாக ஒலிக்கும்
பள்ளி வாகனத்திற்கு
என்ன பதில் சொல்ல?

**பி.கே.சாமி**

நீ தந்த முட்களை
கொண்டுதான்
உனக்கு வேலி செய்கிறேன்
நான் தந்த மலர்களை
கொண்டுதான் எனக்கு மலர் வளையம்
தயாரிக்கிறாய்

**சிவ முத்துக்குமரன்**

மீப்பெரு ஒளியையும்
மட்டுப்படுத்தும்
குளிர்கண்ணாடிபோல்
காப்பிட்டுக் கொள்கிறது
கணநேரத்தின் மிகைகளை
ஆறாமறிவு!

**மகி**

பின்முகில் முதுகில்
நின் நகவசூரன்
வலுத் துவந்த பிறை தழும்பில்
நிரூற்ற உச்சந்தொடும் எரிச்சல்
அனங்கனவன் விட்டுச்சென்ற
மோட்சத்தின் மிச்சவாகை...

**சே.மகேஷ்**

# பால்யத்தின் வண்ணங்கள்

பள்ளிச்சீருடையின் நீலம்,
சிலேட்டுகளின் சாம்பல்,
புத்தக அட்டைகளின் பழுப்பு,
சுதந்திரதி ˙ன மிட்டாயின் ஆரஞ்சு,
பூவரசம் பீப்பீகளின் பச்சை,
தித்திக்கும் மிட்டாயின் ரோஸ்,
தின்பண்டக் குடலின் மஞ்சள்,
வாலாட்டும் நாய்க்குட்டியின் கருப்பு,
துவர்க்கும் நாவலின் கருநீலம்,
உள்ளங்கைகளின் மருதாணிச் சிவப்பு,
சடை பின்னிச் சூடும் கனகாம்பரம்,
டிசம்பர்ப் பூக்களின் ஊதா,
மற்றும், மனதின் பால்வெள்ளை நிறத்துடனும்
இருந்தது நம் பால்யம்...

**மஞ்சு விஸ்வநாதன்**

அச் சருகினில்
சிறுநீர் பெய்து
சிதைத்து மகிழ்ந்த
அச் சிறுவனுக்கு
பெருநீரான மழைக்கு
தன் குடிசையொரு
சருகென அறிந்திருக்குமாயின்
இனி காணும் சருகுகளை எடுத்து
பூமாலையாய்
கோர்த்துக் கொண்டிருப்பான்....!

**சுயம்பு**

சூரியனோடு எழுந்து
நிலவோடு உறங்கப்போகும்
என் அப்பாவின் கைகளில்
காப்புகளாய்
காய்த்திருக்கிறது
நட்சத்திரங்கள்

**ராம் பெரியசாமி**



# கோணம்

பிள்ளை
வரம் வேண்டி
கட்டிய
தொட்டில் கட்டில்கள்

இன்னோர்
மரத்தின் இறந்த
குச்சிகள்....

**வீ.கதிரவன்**

வெறுமையின் முன்
ஏதோ...
நெடுஞ்சாண்கிடையாக
தம் மறைவின் கதவை
உதைத்த வண்ணமாய்
மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றபடி
வானமுகட்டை
நோக்கிச் சென்ற பார்வைகளில்
வழக்கத்திற்கு மாறாக
ஏதோ...
புதுமை போல் உட்கிடையான
உணர்ச்சிக் குவியலின் சாரமாய்
உயிரோட்டமான
ஒரு கவிதைக்கீற்றின் சாயலிலான
சில கனவின் திசைகளைத்
தேடித்திரியும் பறவைகள்.

**ஜா.ஜோசப், தூத்துக்குடி**

விண்மீன்கள் எரியும் இரவுக்காடு
பவளமல்லியின் வாசத்தால் நிறைகிறது.
பனி விலக்கி முகம் காட்டும் சந்திரப்பிறையோ ஞானியாய் நகர்ந்து போக
நினைவுகளின் வெம்மையை குளிர்வித்து
இந்தக்கணத்தை தனதாக்கிக்கொள்கிறது
அடைகொள்ளச்செல்லும்
பெயரறியாப்பட்சிகள்!

**அன்பி**

வளர்க்கப்படும் சேவல்
வளர வளர நெருங்கிவருகிறது
பலிகொடுக்கும் நாள்....

**ரமேஷ் கலை மித்ரன்**

# பிளாட்பாரம்

நாசியை துளைத்தெடுக்கும்
அந்த அருவருப்பான நெடியை
பொருக்க முடியாது
அடிவயிற்றின் ஆழத்திலிருந்து முயன்ற வரை உமிழ் நீரை சுறந்து காரி
துப்பி திரும்புகையில்
வாயில் சோற்றுருண்டையுடன்
ஊறுகாயை நக்கிக்கொண்டிருந்தாள்
அவள்.

**சுஷ்மா**

# ஓர் முதிர்கன்னியும் சில சாமகோடங்கிகளும்

நல்லகாலம் பொறக்குது
நல்லகாலம் பொறக்குதென்ற குரல்கேட்டு அரண்டுயெழுந்தாள்
நாளுவயதுமுத்த மஞ்சுளா அக்கா
கூடவே நானும்


இந்த வீட்டுக்கு
நல்லசேதியொன்னு வரபோகுது
நல்லசேதியொன்னுவரபோகுதென
கூவியக்குரலால் இயல்புநிலைக்கி
மாறியவள் வெட்கப்புன்னகையுடன்
போர்வைக்குள் புகுந்துகொண்டாள்

காலையிலே கண்விழித்து
தலைமுழ்கி பூச்சூடி காத்திருந்தவளிடம் படி அரிசி
வாங்கிசென்றான் சாமக்கோடங்கி

வருடாவருடம்
அதே ராகத்தோடும் அதே செய்தியோடும்
வெவ்வேறு கோடங்கிகள்

முப்பத்தாறு வயதாகும் மஞ்சுளா அக்கா
இப்பொழுதெல்லாம் அக்குரலுக்கு எழுந்திரிப்பதுமில்லை
வெட்கப்படுவதுமில்லை
அவளோடுறங்கும் ஏக்கம் மட்டுமே
எழுந்து அரண்டு அழுகிறது
என் மகள் வடிவில்.

வ.முகிலழகி



.

# தூக்கம்

தூக்கம் என்பது
மரணத்தின் சிறு துண்டு..

தூங்காத இரவுகள் எல்லாம்
மரணத்தின் தோரணங்கள்..

இருள் சுமந்த இரவுகளை
இரையாக்கிக்கொள்ளும்
தூக்கத்திலேதான்
நான்..
சம்மந்தமே இல்லாமல்
பெரும் பணக்காரனாகவும் வாழ்கிறேன்..
பெருங்கவியாகவும்
வாழ்கிறேன்..

விழித்திருக்கும் பொழுதெல்லாம்.. நான்
சில சமயங்களில்
விலங்காக வாழ்கிறேன்.
சில சமயங்களில்
விலங்கோடு வாழ்கிறேன்.
இன்னும் சில சமயங்களில்
ஒன்றும்
விளங்காமலே வாழ்கிறேன்.

அதாவது,
விழித்திருக்கும் போது
நான் நானாகவே
வாழ வழிதெரியாமல்
விழித்திருக்கிறேன்..

ஆதலினால்
தூங்கச் செல்வீர்.

சிவ. கருணாநிதி.

உடை திமிரும்
அங்கத்தை கடிக்கும்
கடுங்கண்

அடர் நெரிசலில்
நுழையும்
சிகரெட்புகை

சிலேடையற்று
சிலாகிக்கும்
சினிமாநகைச்சுவை

சலவை குறைவால்
சந்தேகிக்கும்
கண்ணாடி கதவாளர்

ஆங்கிலம்
திக்கினால்
அறிவிலிப்பார்வை

பாலினபாகத்தை
கொச்சையாக்கும்
கோபச்சொற்கள்

கூட்டத்தினோரமும்
கூச்சமின்றி
சிறுநீர்

குழந்தைகள்
பயந்தழும்
பெற்றோரின் சண்டை

கிழத்திற்கும்
இடம்தராத
பேருந்து இருக்கை

பிச்சைகள் கடந்து
பெருஞ்சாமி
காணிக்கை

நீர்நிலையில்
நெளியும்
நெகிழிகள்

வியர்வையற்ற
போன்
விளையாட்டு..

இச்சிறுமைகளால்
வாள்முனை
வலியெனக்கு
பேனா பிடித்தென்ன பயன்

ஓர்
மீன்காரியின்
கொண்டை பூவாய்..

வெயில் பாலா